MC.11/2024

02 .09.2025

PW2- முனிசாமி த/பெ.சாமிகண்ணு, வயது–57

எதிர்மனுதாரர் ஆஜர்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.25 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.44 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathu in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2025

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

எதற்காக நீங்கள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்கள் என்றால் மனுதாரர் அழைத்ததின் பெயரில் சாட்சியம் அளிப்பதற்காக வந்துள்ளேன். மனுதாரர் உங்களுக்கு எப்படி அறிமுகம் என்றால் மனுதாரரின் தகப்பனார் எனக்கு நெருங்கிய நண்பர். மனுதாரரின் தகப்பனாரும் நானும் வியாபார ரீதியாகவும் பழக்கம் மற்றும் தூரத்து உறவு. மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தும் மனுதாரரின் தகப்பனார் மூலமாக தான் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மேலும் மனுதாரர் மூலமாகவும் மனுவின் சங்கதிகளை தெரிந்து கொண்டீர்களா என்றால் ஆமாம். சில சங்கதிகள் எனக்கு நேரடியாகவும் தெரியும். உங்களுக்கு எந்த ஊர் என்றால் 102 ரெட்டியூர், வாணியம்பாடி. மனுதாரர் எந்த ஊர் என்றால் அச்சமங்கலம். நீங்கள் என்ன பணி செய்கிறீர்கள் என்றால் ஆயுள் காப்பீட்டு கழகத்தில் முகவர். மனுதாரர் திருமணத்தில் கலந்துகொண்டீர்களா என்றால் கலந்துகொண்டேன். எப்போது மனுதாரருக்கு திருமணம் நடந்தது என்றால் 2000–ம் ஆண்டு. மனுதாரருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரண்டு மகள்கள். அவர்கள் இருவரின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் இருவரும் என்ன

படித்துள்ளார்கள் என்றால் ஒருவர் வேலை செய்கிறார். மற்றொரு மகள் படித்து வருகிறார். ஒரு மகள் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் செவிலியர் படிப்பு படித்து முடித்து விட்டார். செவிலியர் பணி செய்வதாக கேள்விப்பட்டேன். இரண்டு மகள்களையும் யார் பராமரித்து வருகிறார் என்றால் எதிர்மனுதாரர் தான் பராமரித்து வருகிறார். இரண்டு பெண் குழந்தைகளையும் யார் படிக்க வைத்தார்கள் என்றால் குழந்தைகள் படிக்கும்போது மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஒன்றாக தான் வாழ்ந்து வந்தார்கள். இருவரும் சேர்ந்து தான் படிக்க வைத்தார்கள். மேற்படி விவரங்கள் உங்களுக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு நேரடியாக தெரியும்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur

Chief Judicial Magistrate,
Tirupathur.